பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 26 ஞாயிற்றுக்கிழமை 11.09.2022 கதிர் 197

## மகாராணிக்கு இறுதி அஞ்சலி: பிரிட்டன் செல்கின்றார் ரணில்



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2

# இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு உறுப்பு நாடுகளின் ஆதரவு வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

AMNESTY INTERNATIONAL

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வு நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் வெளிப்படுத்திய பொறுப்புக்கூறல் திட்டத்தை – உலகளாவிய நியாயாதிக்கப் பிரயோகத்தை முன்னெடுக்க வேண்டும் என்று சபையின் உறுப்பு நாடுகளை சர்வதேச மன்னிப்புச் சபை பகிரங்கமாகக் கோரியுள்ளது. 2

## வெளிநாடு செல்ல முயற்சித்த 85 பேர் கல்குடா கடற்பரப்பில் சிக்கினார்கள்!

இலங்கையிலிருந்து படகு மூலம் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 85 பேர் கடற்படையினரால் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு -கல்குடா கடற்பரப்பில்வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 60 ஆண்களும், 18 வயதுக்கு மேற்பட்ட 14 பெண்களும், 18 வயதுக்கு உட்பட்ட 11 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

இவர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் 2

## ஜெனிவா சென்றடைந்த தமிழ் அரசியல்வாதிகள்

### நீதி கோரி நாளை ஆர்ப்பாட்டம்




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51ஆவது கூட்டத் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், அங்கு நடைபெறவுள்ள பக்க அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்துநான்கு தமிழ் அரசியல்வாதிகள் ஜெனிவா சென்றடைந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட 2

## உள்நாட்டுப் பொறிமுறை; அதில் மாற்றமே இல்லை

### ஐ.நா. மனித உரிமை சபை தலைவரிடம் வெளிவிவகார அமைச்சர் திட்டவட்டம்

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் தலைவர் பெடாரியோ வில்லியர்ஸைச் சந்தித்துள்ளனர்.

உள்நாட்டுப் பொறிமுறைகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இதன் போது மீண்டும் 2

## ரணில் – சமந்தா சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவரகத்தின் (USAID) நிர்வாகி சமந்தா பவர் இன்று சந்தித்து உரையாடினார்.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு நேற்று வருகை தந்த 2

## ஆசியக் கிண்ணத்தை வெல்லுமா இலங்கை?

### இன்றிரவு பாகிஸ்தானுடன் சமர்




ஆசியக்கிண்ணத்தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் இன்று பலப்பரீட்சை நடத்துகின்றன. 15 ஆவது ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி 2

ஜெனிவா செல்லும் தமிழர்களிடம்

## உறவுகளின் கோரிக்கை

தமிழர்களின் கோரிக்கையை முன்னிறுத்திப் பிரசாரம் செய்யாமல் ஜெனிவா செல்வது, நோய்வாய்ப்பட்ட ஒருவரைப் புறக்கணித்து, அவரது இறுதிச்சடங்குக்குச் செல்வதைப் போன்றது என வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். 2

## நாட்டை காத்தோர் சிறைக்குள்

### சஜித் கடும் சீற்றம்



நாட்டை வங்குரோத் தாக்கிய காக்கை அமெரிக்கா செல்கின்றது. ஆனால், நாட்டுக்காகப் போராடிய இளைஞர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றார்கள் – என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தின், பாணந்துறை தேர்தல் 2

## திருமலை விபத்தில் குடும்பப் பெண் சாவு

திருகோணமலை – வான் எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆயிலியடி சந்தியில் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறுதலாக கீழே விழுந்து குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வான் எல பகுதியில் இருந்து சிறாஜ்நகர் 97ஆம் கட்டைக்கு இன்று காலை மோட்டார் 2

## ஜெனிவா.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே. கோடீஸ்வரன்,

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அனந்தி சசிதரன், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தியாகராஜா சரவணபவன் மற்றும் மாணவர் மீட்புப் பேரவையின் தலைவரும் சமூகச் செயற்பாட்டாளருமான செல்வராஜா கணேஷ் ஆகியோரே ஜெனிவா சென்றடைந்தனர்.

இது தொடர்பில் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த மனித உரிமை மீறல்கள், இன அழிப்பு, அதற்குச் சமாந்தரமாக இடம்பெற்ற படுகொலைகள், இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் அநீதி, பாரபட்சம், புறக்கணிப்பு பற்றி நாங்கள் பல தடவைகள் கூறியிருந்தோம். அதற்கு உரிய நீதி கிடைக்க வேண்டும்.

இந்த நியாயமான கோரிக்கையை ஏலவே முன்வைத்து நீதி கேட்டு இருந்தோம். இதுவரைக்கும் அந்த நீதி தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

அதற்காக இம்முறை நீதி கோரி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மாநாட்டு மண்டபத்துக்கு முன்பாக நாளை அனைவரும் கூடி கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

அதேவேளை, பக்க அமர்வுகளில் கலந்துகொண்டு தமிழருக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும், படுகொலைகளுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் என்று ஒருமித்த குரலில் வலியுறுத்தவுள்ளோம்.

உலகத் தமிழர்கள் ஒன்று கூடுகின்ற ஜெனிவாக் களத்தை இம்முறை மேலும் பலமாக்கி எமது உரிமைகளை வென்றெடுக்கவே நாங்கள் இங்கு வருகை தந்திருக்கின்றோம் - என்றனர்.

## ஆசியக் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மாதம் 27ஆம் திகதி தொடக்கம் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்று வருகின்றது.

இலங்கை கடைசியாக தான் மோதிய 3 ஆட்டங்களிலும் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. பாகிஸ்தான் அணி 3 ஆட்டங்களில் இரண்டு வெற்றி, ஒரு தோல்வி பெற்று 4 புள்ளிகளுடன் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்நிலையில், ஆசியக் கோப்பையை வெல்வதற்கான இறுதிப்போட்டி இன்று நடக்கின்றது.

இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகும் இறுதிப் போட்டியில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

ஆசியக் கிண்ணத் தொடரில் 'சுப்பர் - 04' சுற்றில் இறுதியாக நடந்த போட்டியில் பாகிஸ்தானை, இலங்கை இலகுவாக வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மகாராணிக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டன் செல்லவுள்ளார். பிரிட்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் பேராலயத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள மகாராணியின் இறுதிக்கிரியைகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.

ஜனாதிபதி எதிர்வரும் 17ஆம் திகதி அல்லது 18ஆம் திகதி பிரிட்டனுக்குப் பயணிக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எலிசபெத் மகாராணியின் இறுதிக் கிரியைகள் நடைபெறும் 19ஆம் திகதி இலங்கையில் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும் என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

## ரணில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமந்தா பவர், விவசாயத்துக்கு உதவியளிக்கும் வகையில் 40 மில்லியன் அமரிக்க டொலர்களுக்கான நிதி உதவியை அறிவித்தார்.

அத்துடன் இலங்கைக்கு அமெரிக்கா இந்தத் தருணத்தில் உதவி செய்யும் என்ற நிலையில், எதிர்காலத்தில் இலங்கையின் நெருக்கடி தொடர்பில் தமது கவலையையும் வெளிப்படுத்தினார்.

அதேநேரம் இந்தியாவுடன் இலங்கை தொடர்பில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமந்தா பவர் இன்று பல்வேறு மட்டத்தினருடனும் சந்திப்புக்களில் ஈடுபடுகின்றார்.

## உள்நாட்டுப் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி குறிப்பிட்டார்.

மனித உரிமை நடைமுறைகளை மேம்படுத்துவதில் இலங்கையின் தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும் தற்போதைய சவால்களை எதிர்கொள்வதற்கான பங்களிப்பு தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது எனவும் அவர் மேலும் கூறினார்.

## ஜெனிவா செல்லும் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் சுழற்சி முறையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கொட்டகையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளைக் கண்டறியவும், தமிழ் இறையாண்மையைப் பெறவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிக்காகக் காத்திருக்கும் இந்தக் குடிசையில் எமது தொடர் போராட்டம் 2 ஆயிரத்து 29 நாட்களாகத் தொடர்கின்றது.

நாளை 12 ஆம் திகதி, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51ஆவது அமர்வு ஆரம்பமாகின்றது. நமது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் ஆகஸ்ட் மாதத்துக்கு முன்பு அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்த் ஆகிய நாடுகளுடன் தமிழர்கள் சார்பாகப் பிரசாரம் செய்யத் தவறிவிட்டனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை தொடர்பான பெரும்பாலான முடிவுகள் உறுப்பு நாடுகளின் தலைநகரில் எடுக்கப்படுகின்றன. ஜெனிவாவில் அல்ல.

எங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் அமெரிக்கா, இங்கிலாந்து அல்லது நெதர்லாந்துக்குச் சென்றதில்லை. அவர்கள் தமிழர்களுக்கான சேவையைச் செய்யத் தவறவிட்டார்கள்.

தமிழர்களின் கோரிக்கையை முன்னிறுத்திப் பிரசாரம் செய்யாமல் ஜெனிவா செல்வது, நோய்வாய்ப்பட்ட ஒருவரைப் புறக்கணித்து, அவரது இறுதிச்சடங்குக்குச் செல்வதைப் போன்றதாகும்.

ஸ்ரீலங்காவின் போர்க்குற்றவாளிகளுக்குத் தண்டனை, போர்க்குற்றவாளிகளுக்கு எதிரான பொருளாதார மற்றும் பயணத்தடைகள், சாட்சியங்கள் சேகரிக்கும் பொறிமுறையை விரிவுபடுத்துதல் போன்றவற்றைக் கோரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை இப்போது நாம் அறிவோம்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்வது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தாலேயே தீர்மானிக்கப்படும். அவர்கள் சரியான நேரத்துக்காகக் காத்திருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விவகாரம் தோல்வியுற்றால், தமிழர்கள் மீதான இனப்படுகொலை குறித்து அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் ஒருதலைப்பட்சமாக முடிவெடுக்கும்.

எனவே, ஜெனிவா செல்லும் தமிழர்களிடம் சிலவற்றைக் கேட்க வேண்டாம் என்று கோருகின்றோம். அரசமைப்பின் 13ஆவது திருத்தம் பற்றிப் பேச வேண்டாம், இலங்கை நீதிமன்ற அமைப்பை ஆதரிக்க வேண்டாம், இலங்கையின் ஒற்றையாட்சி முறைமையின் அங்கமான சமஷ்டியை முறையைக் கேட்காதீர்கள், ஒரு நாட்டுக்குள் இரு நாடு என்று கேட்காதீர்கள். அப்படி ஒன்றும் இல்லை. அது ஒரு போலித் தத்துவம் - என்றனர்.

## வெளிநாடு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிவந்துள்ளது.

கைதானவர்கள் ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர், சட்ட நடவடிக்கையின் நிமித்தம் பொலிஸாரிடம் கையளிக்கப்படவுள்ளனர்.

## நாட்டைக் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டை வங்குரோத்தாக்கிய காக்கை பஎில் ராஜபக்ச கூட சுதந்திரமாக அமெரிக்கா செல்கின்றார். இந்நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைந்து விரட்டியடித்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் இலங்கைக்குத் திரும்பியுள்ளார். அவர்கள் அந்த சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் போதே இந்நாட்டின் பொதுமக்களை ஒன்றுதிரட்டி போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அரசு சிறைக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றது.

அன்று இந்நாட்டில் அடக்கு முறையை ஆரம்பித்தவர்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்காக அலரி மாளிகையில் திரண்ட குண்டர்கள்தான். அவர்கள் அனைவரும் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றனர். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஒட்டுமொத்த நாட்டு மக்களும் ஒன்றிணைந்து பொதுப் போராட்டத்தின் மூலம் ஜனாதிபதியையும் பிரதமரையும் விரட்டியடித்தனர். ஆனால், அதற்குப் பதிலாக மொட்டுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதி ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'மொட்டு'க்கு தனது நன்றிக் கடனை நிறைவேற்றி வருகின்றார். மக்களுக்கு ஆற்ற வேண்டிய தமது கடமைகளை மறந்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி ராஜபக்ஷகளுக்கு கடன்பட்டிருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தி ராஜபக்ஷகளுக்கு கடன்பட்டிருக்கவில்லை - என்றார்.

## திருமலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது, வீதியை விட்டு விலகி மோட்டார் சைக்கிள் பள்ளத்தில் விழுந்ததில் குறித்த பெண் வீழ்ந்து உயிரிழந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த பெண் சிராஜ் நகர் - 97ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான ஆர்.பௌவுசியா (வயது 44) என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த குறித்த பெண்ணின் சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைக்காகக் கிண்ணியா தள வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளைவான் - எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கைக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் தற்போதைய நெருக்கடியின் மையத்தில் உள்ள மனித உரிமைகள் தொடர்பான நிலைமைகளைக் கண்காணிப்பதற்கும், அறிக்கையிடுவதற்கும், பரிந்துரைகளை வழங்குவதற்கும் இலங்கை தொடர்பான நிபுணர் பொறிமுறையை அமைக்க வேண்டும் என்றும் மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

இலங்கை கடுமையான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இலங்கையில் தண்டனையின்மை என்பது சட்டத்தின் ஆட்சி, நல்லிணக்கம், நிலையான அபிவிருத்தி என்பவற்றுக்கு மையத்தடையாக உள்ளது.

போர் முடிவடைந்து பதின்மூன்று வருடங்கள் கடந்த போதும், ஆட்சிக்கு வரும் அரசுகள், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு பயனுள்ள நிலைமாறுகால நீதி செயல்முறையைத் தொடரத் தவறி வருகின்றன.

போர்க்குற்றவாளிகள் என்று கூறப்படுபவர்களுக்கு அரச பதவிகள் மற்றும் வெகுமதிகளை வழங்கியது. காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் அலுவலகம் போன்ற உள்நாட்டு நிலைமாற்று நீதி அமைப்புகள், இழப்பீடுகள் பெரும்பாலும் பொருத்தமற்றதாகிவிட்டன. அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் நம்பிக்கையை இழந்துவிட்டன.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து சர்வதேச கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் மிகவும் முக்கியமானது.

இந்தநிலையில் மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் திட்டத்தை பலப்படுத்துவதற்காக இலங்கை மீதான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு உறுப்பு நாடுகளை மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

அத்துடன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்து, அதன் பயன்பாட்டுக்கு உடனடித் தடை விதிக்க வேண்டும். இடைப்பட்ட காலத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அமைதியான போராட்டக்காரர்கள் மீதான அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

அத்துடன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டத்தை உடனடியாக ஏற்றுக்கொண்டு அதை முழுமையாக செயற்படுத்தவேண்டும் என்பதை இலங்கையிடம் வலியுறுத்த வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளிடம் கோரியுள்ளது.

076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## புறக்கணிப்பு ஏன்?

தென்னிலங்கை அரசியல் தலைவர்களுக்கு வடக்கு, கிழக்கு குறித்து – தமிழர் தாயகம் பற்றி – கவலை இல்லை. தங்கள் பௌத்த, சிங்கள மக்கள், அவர்களின் பிரதேசங்கள் குறித்துத் தான் எப்போதும் அதிக சிரத்தை.

அதை நிரூபிக்குமாற் போல சில விடயங்கள் இப்போது சத்தம் சந்தடியின்றி நடந்தேறி இருக்கின்றன.

வழமையாக ஜனாதிபதி பதவி நிலையில் ஒரு மாற்றம் வரும் போது அமைச்சரவையும் தானாகவே கலையும். புதிய அமைச்சரவையை புதிய ஜனாதிபதி நியமிப்பார். அவரின் முன்னிலையில் பிரதமரிலிருந்து முழு அமைச்சர்களும் புதிதாகப் பதவிப்பிரமாணம் செய்வர்.

அதேபோல ராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களும் பதவி இழப்பர். அந்த இடங்களுக்கும் புதியவர்கள் நியமிக்கப்படுவர்.

அது மாத்திரமல்ல, அமைச்சுகளின் செயலாளர்களும் புதிதாக நியமிக்கப்படுவர். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களின் தலைவர்களும் அரசினால் புதிதாக தேர்ந்தெடுக்கப்படுவர்.

அதற்கு அப்பால் புதிய ஜனாதிபதி பதவி ஏற்றதும் அவர் தமக்குவிரும்பிய மாகாண ஆளுநர்களை அப்பதவிகளுக்கு நியமிக்க வசதியாக முன்னைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் பதவி விலகுவர். அந்த நாகரிகமும் இப்போது இல்லை.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை – குறிப்பாக யாழ் மாவட்டத்தைத் பொறுத்தவரை – கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது நியமிக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் அவர் அக்காலத்தில் நடத்திய திருவிழாக்களும் மறக்கக் கூடிய விடயங்கள் அல்ல.

அந்த இரண்டரை ஆண்டு காலப்பகுதியில் தென்னிலங்கையில் ஊழல், மோசடிகள், குளறுபடிகள் என ராஜபக்ஷக்கள் மீது தாராளமாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

ஆனால் இந்தக் காலத்தில் வடக்கின் பக்கம் – குறிப்பாக யாழ் மாவட்டத்தின் பக்கம் – பெரிய ராஜபக்ஷக்கள் யாருமே தலை வைத்துக் கூடப் படுக்கவில்லை. ஆனால் அவர்கள் தம் பிரதிநிதியாக இங்கு நியமித்து, மாவட்ட ஒருங்கிணைப்பை முன்னெடுத்தவர் ராஜபக்ஷக்கள் தென்னிலங்கையில் சம்பாதித்த கெட்ட பெயருக்கு சற்றேனும் குறைவில்லாத பெயரை வடக்கில் அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கத் தவறவில்லை என்பதும் மறுப்பதற்கில்லை.

நாட்டில் 25 நிர்வாக மாவட்டங்கள். அவற்றில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய எட்டுமே தமிழர்கள் வாழும் மாவட்டங்களாகும்.

ரணிலின் அரசு சத்தம் சந்தடியின்றி இந்த 25 மாவட்டங்களில் 18 மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களை நியமித்து அதற்கான நியமனக் கடிதங்களையும் அவர்களுக்கு வழங்கி விட்டது.

தமிழர்கள் வாழும் இந்த எட்டு மாவட்டங்களில் திருகோணமலையிலும் அம்பாறையிலும் தமிழ்ப் பேசும் மக்கள் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் மூலம் சிறுபான்மையினர் ஆக்கப்பட்டு வருகின்றனர். அங்கு சிங்கள மக்களின் நலனை விரைந்து கவனிக்கவோ என்னவோ அங்கும் ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் பதவிகள் நிரப்பப்பட்டு விட்டன.

ஆனால் ஏனைய ஆறு தமிழ் மாவட்டங்களுக்கும், பொலன்னறுவைக்கும் இன்னும் நியமனங்கள் இல்லை. புதிய ஜனாதிபதி பதவியேற்று இரண்டு மாதங்கள் ஆகியும் தமிழ் மாவட்டங்களுக்கு உரியவர்கள் நியமிக்கப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தொடர்பான குழப்பத்தால் பொலன்னறுவை மாவட்டம் நிரப்பப்படாமல் இருந்தாலும், தமிழ் பிரதேசங்கள் ஏன் கவனிக்கப்படவில்லை? தமிழர்கள் என்ற உதாசீனப் போக்குதான் காரணமா?

# ராஜபக்ஷ குடும்பத்துடன் இணைந்து போராட்டகாரரை நசுக்குகிறார் ரணில்!

## மாவிட்டபுரத்தில் ஜோசப் ஸ்டாலின் காட்டம்

(கலையமுதன்)



ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ கும்பலுடன் இணைந்து போராட்டக்காரர்களை நசுக்குகின்ற வேலையில் ஈடுபடுகின்றார். போராட்டக்காரர்களை அடக்குவதற்காக பயங்கரவாதத் தடை சட்டத்தை கையில் எடுத்துள்ளனர். இதற்கு எதிராக நாம் அனைவரும் குரல் கொடுப்போம் என

இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதே ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் பாதிப்பு காரணமாக தற்போதும் 46 அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர். சமூக வலைத்தளங்களில் புகைப்படங்களைப் பதிவேற்றியவர்களும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகள் தற்போது கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாங்கள் அவர்களது உண்ணாவிரதப் போராட்டத்துக்குப் பூரண ஆதரவைத் தெரிவிக்கின்றோம். தமிழ் மக்கள் தரப்பிலிருந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டு கையெழுத்து திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல்த் தலைவர்கள் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது, இதனால் சிங்கள மக்களும் எதிர்காலத்தில் பாதிக்கப்படுவார்கள் எனதொடர்ந்துகருத்துக்களைதெரிவித்தனர். சிங்கள பகுதிகளிலும் இராணுவ முகாம்கள் உருவாகும் என குட்டிமணி தெரிவித்திருந்தார். தற்போது என்ன நடக்கின்றது.

காலிமுகத்திடல் போராட்டம் மிக அமைதியாக இடம்பெற்றது. இதன் காரணமாக நாட்டில் பெரிய மக்கள் எழுச்சி ஏற்பட்டு ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ விரட்டியடிக்கப்பட்டார். 134 வாக்குகளுடன் நாடாளுமன்றில் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ கும்பலுடன் இணைந்து போராட்டக்காரர்களை நசுக்குகின்ற வேலையில் ஈடுபடுகின்றார். போராட்டக்காரர்களை அடக்குவதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கையில் எடுத்துள்ளனர். இதற்கு எதிராக நாம் அனைவரும் குரல் கொடுப்போம்.

நாட்டில் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு இல்லை. பொருளகளின் விலைகளோ அதிகரித்துவிட்டன. இந்நிலையில் எதற்கு 37 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எங்கிருந்து பணம் செலவிடப்படப் போகின்றது. – என்றார்.

# புலனாய்வுத் தகவலை மீறி 74 வீடுகள் எரிக்க அனுமதி?

## விசாரணைக்குழு அறிக்கை சுட்டிக்காட்டு

கடந்த மார்ச் மற்றும் மே மாதங்களில் இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வு அமைப்புகளில் பல பாரிய குறைபாடுகள் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கை கடந்த 08 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

மிரிஹானில் உள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீடு தாக்கப்பட்டதைத் தொடர்ந்து 74 நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் சேதப்படுத்தப்பட்டதையைத் தடுப்பதற்கு புலனாய்வுப் பிரிவினர் போதிய தகவல்களை வழங்கிய போதிலும் பொலிஸாரும், இராணுவத்தினரும் நடவடிக்கை எடுக்கவில்லை என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக வீடுகள் மற்றும் சொத்துக்கள் சேதமாக்கப்படுவதைத் தடுக்குமாறு உயர் இராணுவ அதிகாரிகளுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்ட போதிலும், கீழ்நிலை அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகள் வழங்கப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினரின் புலனாய்வு அமைப்புகளின் விசாரணைக் குழுவால் இந்த உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சாட்சியங்களின்படி, பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் புலனாய்வு அமைப்புகளின் நடத்தையில் மூன்று பாரிய குறைபாடுகளை விசாரணைக் குழு அவதானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மண்டூர் முருகன் தீர்த்தோற்சவம்





வரலாற்றுச் சிறப்புமிக்க சின்னக்கதிர்காமம் எனப் போற்றப்படும் மண்டூர் முருகன் ஆலய தீர்த்தோற்சவம் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன் மண்டூர் ஆற்றில் நேற்று நடைபெற்றது. (படம்– க.கிருபாகரன்).

# பஸ் - டாங்கர் மோதி எரிந்தன மெக்ஸிகோவில் 18 பேர் சாவு





மெக்ஸிகோ சிட்டி,செப்.11

வடக்கு மெக்ஸிகோவில், எரிபொருள் ஏற்றிக் கொண்டு சென்ற டாங்கர் லொறியும்,பஸ்ஸும் மோதி ஏற்பட்ட தீ விபத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மெக்ஸிகோவின் ஹிடால்கோ நகரில் இருந்து மான்டேரியை நோக்கி பயணிகள் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்போது நெடுஞ்சாலையில் எரிபொருள் ஏற்றிக்கொண்டு வந்த டாங்கர் லொறி ஒன்று பஸ்ஸின் மீது மோதியது. இந்த விபத்தில் டாங்கர் லொறி யில் இருந்த எரிபொருள் வெடித்துத் தீ பற்றியது. இதில் டாங்கர் லொறியும், பஸ்ஸும் தீ பிடித்து முழுவ துமாக எரிந்து நாசமாகின.

இந்த விபத்துக் குறித்து தகவலறிந்த தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அதிகாலை ஏற்பட்ட இந்தக் கோர விபத்தில் பஸ்ஸில் பயணித்த 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். எனினும், டாங்கர் லொறி டிரைவர் உயிர்பிழைத்தார் எனக் கூறப்படுகிறது.

இந்த விபத்து குறித்து பொலிஸ் விசாரணை நடைபெற்று வருகிறது. மேலும், இந்த விபத்தில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ் சப்படுகிறது.

## திமிங்கலத்துடன் மோதியதில் படகு கவிழ்ந்து ஐவர் மரணம்!

### நியூசிலாந்தின் கோஸ் பேயில் சம்பவம்



வெல்லிங்டன்,செப்.11

திமிங்கலம் மீது மோதி படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

நியூசிலாந்து நாட்டின் கோஸ் பே பகுதியில் உள்ள கடலில் நேற்று பறவை ஆர்வலர்கள் 11 பேர் சிறிய ரக படகில் பயணித்தனர். 11 பேரும் 50 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் ஆவர்.

அப்போது, அந்த சிறிய ரக படகு மீது கடலில் நீந்திக்கொண்டி ருந்த திமிங்கலம் மோதியுள்ளது. இதில், படகு நிலைகுலைந்து கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 11 பேரும் கடலில் மூழ்கி தத்தளித்தனர். இது குறித்து தகவலறிந்த கடலோர காவல்படையினர் விபத்து நடந்த பகுதிக்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். விபத்தில் மூழ்கிய படகில் இருந்து 6 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஆனால், இந்த விபத்தில் கடலில் மூழ்கி 5 பேர் உயிரிழந்தனர். திமிங்கலம் மீது மோதி படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக முதற்கட்ட தகவல் வெளியான நிலையில் விபத்துக்கான திமிங்கலம் மோதியது தான் காரணமா அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பஸ் – கார் நேருக்கு நேர் மோதி தீப்பற்றியதில் 15 பேர் கருக்கினர்

### நைஜீரியாவில் மிக மோசமான விபத்து



அபுஜா,செப்.12

பஸ் - கார் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட பயங் கர தீ விபத்தில் சிக்கி 15 பேர் உடல் கருகி உயிரி ழந்தனர்.

மேற்கு ஆப்பிரிக்காவின் நைஜீரியாவில் தென்கிழக்கே உள்ள ஒயோ மாகாணத்தின் இப ரபா நகரில் உள்ள நெடுஞ் சாலையில் சென்று கொண் டிருந்த பஸ் சாலையில் மறுபுறம் வேகமாக வந்த கார் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்தக் கோர விபத்தில் காரும், பஸ்ஸும் தீப் பிடித்து எரிந்தன. தீ மளமளவென எரிந்ததால் கார் மற் றும் பஸ்ஸுக்குள் பலர் சிக்கிக்கொண்டனர். இந்த விபத்துக் குறித்து தகவலறிந்த மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். ஆனால், இந்த கார் - பஸ் விபத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 15 பேர் உடல் கருகி பரிதாப மாக உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.

## அமெ. தயாரிப்பு ஹெலி ஆப்கானில் வீழ்ந்தது!

### மூன்று தலிபான்கள் உயிரிழப்பு



காபுல்,செப்.11

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இராணுவ ஹெலிக்கொப்டரில் பயிற்சியின் போது ஏற்பட்ட விபத்தில் வீழ்ந்து நொருங்கியது. மூன்று தலிபான்கள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானை கடந்த ஆண்டு தலிபான்கள் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து, அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு தலி பான்களை ஒடுக்க அஷ்ரப் கனி ஆட்சி காலத்தில் ஆப்கானிஸ்தான் அரசுக்கு வழங்கப்பட்ட இராணுவ ஆயுதங்கள், ஈராணுவ ஹெலிக்கொப்டர்களை தலிபான்கள் கைப்பற்றினர். இதனை யடுத்து, தலிபான்கள் தங்களுக்கென பாதுகாப்பு படைகளை அமை த்துள்ளன. தலிபான்கள் அமைத்துள்ள பாதுகாப்புபடையில் அமெ ரிக்காவில் தயாரிக்கப்பட்ட ராணுவ ஹெலிக்கொப்டர்கள், ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பிளாக் ஹாக் இராணுவ ஹெலிக்கொப்டரில் தலிபான்களின் பாதுகாப்பு படையில் இடம்பெற்றிருந்த குழுவினர் நேற்று பயிற்சியில் ஈடுபட்டனர். ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபுலில் நடந்த பயிற்சியின் போது ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர் எனத் தலிபான்கள் தெரி வித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழகத்தை நடந்து கடந்து கேரளத்துக்குள் ராகுல் பவனி




திருவனந்தபுரம்,செப்.11

தமிழகத்தில் 4 நாள்கள் நடைபயணம் மேற்கொண்ட ராகுல்காந்தி நேற்று குமரி மாவட்டம் தலச்சன் விளையில் முடித்தார்.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி "பாரத் ஜோடோ யாத்ரா" என்ற பெயரிலான இந்திய ஒற்றுமை பயணத்தில் ஈடுபட்டு வருகிறார். இதனை கன்னியாகுமரியில் காந்தி மண்டபம் முன்பு இருந்து தொடங்கினார். தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேசியக் கொடியை ராகுல் காந்தியிடம் வழங்கி நடை பயணத்தை தொடங்கி வைத்தார். இதனையடுத்து தேசிய கொடியை கையில் ஏந்தியவாறு சுமார் 700 மீற்றர் தூரம் நடந்து வந்த ராகுல் காந்தி கன்னியாகுமரி கடற்கரை சாலையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். தமிழகத்தில் 4 நாள்கள் நடைபயணம் மேற்கொண்ட ராகுல்காந்தி நேற்று குமரி மாவட்டம் தலச்சன்விளையில் முடித்தார். குமரி மாவட்டத்தில் 4 நாள்கள் நடைபயணம் சென்ற ராகுல்காந்தி சுமார் 56 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்றதாக காங்கிரஸ் நிர்வாகிகள் தெரிவித்தனர். இந்த நிலையில், இன்று கேரள எல்லையில் தனது பயணத்தை ராகுல் காந்தி தொடங்கினார். கேரளா, செறுவார கோணத்தில் இருந்து தனது நடை பயணத்தை தொடங்கினார்.

## பிரி. புதிய பிரதமருக்கு வாழ்த்து மகாராணி மறைவுக்கு இரங்கல்

### தெரிவித்தார் நரேந்திர மோடி



புதுடெல்லி,செப்.11

இங்கிலாந்து பிரதமர் லிஸ் ட்ரஸ்ஸை பிரதமர் மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அப்போது ராணி எலிசபெத் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:- பிரதமர் நரேந்திர மோடியும், இங்கிலாந்து பிரதமர் லிஸ் ட்ரசும் தொலைபேசியில் உரையாடினர். அப்போது லிஸ் ட்ரஸ் பிரதமராக தேர்வானதற்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார். இங்கிலாந்தின் வர்த்தகத் துறை மந்திரியாகவும், வெளியுறவுத் துறை மந்திரியாகவும் பதவி வகித்த லிஸ் ட்ரஸ், அப்போது இரு நாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேம்படுத்துவதற்கு ஆற்றிய பங்களிப்புக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்தார்.

இந்தியா - இங்கிலாந்து இடையேயான உறவை மேலும் வலுப்படுத்த இரு தலைவர்களும் உறுதியளித்தனர்.

ராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவை அடுத்து அரச குடும்பத்திற்கும், இங்கிலாந்து மக்களுக்கும் இந்திய மக்கள் சார்பில் பிரதமர் மோடி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

## விநாயகர் சிலை கரைப்பின் போது மகாராஷ்டிராவில் 20 பேர் மரணம்



மும்பை,செப்.11

மகாராஷ்டிராவில் விநாயகர் சிலை கரைப்பு ஊர்வலத்தில் 20 பேர் உயிரிழந்தனர்.

கடந்த 31 ஆம் திகதி விநாயகர் சதுர்த்திப் பண்டிகை கொண் டாடப்பட்டது.

மகாராஷ்டிரா மாநிலயத்தில் விநாயகர் சதுர்த்தியையொட்டி பொது இடங்களில் பிரமாண்ட விநாயகர் சிலைகள் நிறுவப்பட்டு 10 நாள்கள்வழிபாடுநடத்தப்பட்டது. இதனையடுத்து, சிலை கரைப்பு தினமான ஆனந்த சதுர்த்தி அன்று விநாயகர் சிலைகள் நீர்நிலைகளுக்கு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு கரைக்கப்பட்டன.

மகாராஷ்டிராவின் பல்வேறு இடங்களில் சிலை கரைப்பு ஊர்வலத்தின் போது 20 பேர் உயிரிழந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதில், 14 பேர் நீரில் மூழ்கிப் பலியாகினர். ஊர்வலத்தின் போது சாலை விபத்தில் 4 பேரும், மரம் விழுந்து பெண் ஒருவர் என மொத்தம் 20 பேர் உயிரிழந்துள்ளனர் என அம்மாநில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 'மொபைல் கேம் ஒவ்' உரிமையாளர் வசமிருந்து 7 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணக் கட்டுகள்



கொல்கத்தா,செப்.11

பண மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 'மொபைல் கேம் ஒவ்' நிறுவன உரிமையாளரிடமிருந்து ரூ.7 கோடிக்கும் ஆதிக தொகையைப் பறிமுதல் செய்தது மத்திய அமுலாக் கத்துறை.

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் இருந்து செயல்படும் 'மொபைல் கேம் ஒவ்' நிறுவனம், அதன் வாடிக்கையாளர்களிடம் பண மோசடியில் ஈடுபட்டதாக புகார் எழுந்தது. கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் அந்த நிறுவனம் மற்றும் அதன் இயக்குநர்களுக்கு எதிராக கொல்கத்தா பொலிஸ் பணமோசடி வழக்கு தாக்கல் செய்தது. கொல்கத்தா நீதிமன்றத்தில் பெடரல் வங்கி அதிகாரிகள் அளித்த புகாரின் அடிப்படையில் முதல் குற்றப் பத்திரம் பதிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் விசாரணை மேற் கொண்ட மத்திய அமலாக்கத்துறை அதிகாரிகள், மொபைல் கேம் ஒவ் நிறுவன உரிமையாளர் நிசார் அகமது கானுக்கு சொந்தமான இடங்களில் இன்று சோதனை நடத்தினர். இந்த சோதனையை நடைபெற்ற இடங்களில் மத்திய காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. சோதனையின் போது ரூ.2000, ரூ.500 ரூ.200 மதிப்புள்ள நோட்டுக் கட்டுகள் படுக்கை அறை ஒன்றில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கட்டுக்கட்டாக இருந்த அந்த பணத்தை அதிகாரிகள் கைப்பற்றினர். பணத்தை எண்ணும் இயந்திரங்கள் உதவியுடன் அவற்றை எண்ணும் பணி நடைபெற்றது. இதுவரை 7 கோடி ரூபாவுக்கும் அதிகமான ரொக்கப் பணம் கைப்பற்றப்பட்டதாக மத்திய அமலாக்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் அந்த செயலி மற்றும் அதன் ஒப்பரேட்டர்கள் சீன கட்டுப்பாட்டில் உள்ள செயலி நிறுவனங்களுடன் தொடர்பில் உள்ளனரா என்பது குறித்தும் விசாரித்து வருவதாக அமலாக்கத்துறை தகவல்கள் கூறியுள்ளன.

# தென்கிழக்குப் பல்கலையில் மீள இதழியல் கற்கை நெறி

## சிலோன் மீடியா போரம் கோரிக்கை





(நூருல் ஹுதா உமர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூவக்கர் மற்றும் சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உபவேந்தர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போது, தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் இதழியல் கற்கை நெறியினை மீண்டும் ஆரம்பிக்குமாறு சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் கோரிக்கை விடுத்தார்.

இக்கற்கை நெறியினை மேற்கொள்வதற்கு ஊடக வியலாளர்கள் மற்றும் ஊடகத் துறையில் ஆர்வ முள்ளவர்கள் ஆர்வமாக இருக்கின்றனர் எனத் தன்னிடம் விரும்பம் தெரிவித்துள்ள நிலையிலேயே இக்கோரிக்கையைத் தாம் முன்வைக்கிறார் என உபவேந்தரிடம்கலாநிதிறியாத்ஏ.மஜீத்சுட்டிக்காட்டினார்.

இதனையெடுத்து உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூவக்கர், சிலோன் மீடியா போரத்தின் இக்கோரிக்கைய்சி ஏற்று இன்னும் ஓரிரு வாரங்களில் இதழியல் கற்கை நெறிக்கான விண்ணப்பம்படிவங்கள் கோரப்படும் என உறுதியளித்தார்.

மேலும் அண்மையில் இதழியல் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வை பிரமாண்டமானதாகச் செய்தமைக்கு நன்றிகளை உபவேந்தர் உள்ளிட்ட பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு கலாநிதி றியாத் ஏ.மஜீத் இதன்போது தெரிவித்தார்.

தற்போது உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூவக்கர் தலைமையில் பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்படும் பல்வேறு செயற்பாடுகள், அபி விருத்திப் பணிகள் மற்றும் துறைசார் ஆலோசனைகள் குறித்து பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கலாநிதி றியாத் ஏ.மஜீத் உபவேந்தருக்கு தெரி வித்தமையுடன் தங்களின் இவ்வாறான பணிகளுக்கு சிலோன் மீடியா போரம் பக்கபலமாக இருக்குமெனவும் தெரிவித்தார்.

மேலும் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூவக்கர் பதவியேற்று ஒரு வருடப் பூர்த்தியை நினைவுகூர்ந்து நினைவுப் பரிசு ஒன்றையும் சிலோன் மீடியா போரத்தின் சார்பில் றியாத் ஏ.மஜீத் வழங்கி வைத்தார்.

## குடைச்சாமி சித்தரின் சிலை காரைதீவில் நேற்று பிரதிஷ்டை

(காரைதீவு குறூப் நிருபர் சகா)

கிழக்கிலங்கையின் புகழ் பூத்த சித்தராக விளங்கிய குடைச்சாமி சித்தரின் திருவுருவச்சிலை நேற்று சனிக்கிழமை காரைதீவு சிவசக்தி குரு குடைச்சாமி சித்தரின் சர்வ மத பீடத்தில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

அந்தப் பீடத்தின் பொறுப்பாளர் சுவாமி ஜீவாகரன் தலைமையில் அதிகாலை 4 மணிக்கு திருவுரு வச்சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்து சமய ஆர்வலர்களான தவிசாளரும் தர்ம கத்தாவுமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், இந்து சமய விருத்தி சங்க முன்னாள் தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பல பிரமுகர்கள் இந்நிகழ்வில் பங்கேற் றனர்.

மேலும் உள்ளூர் வெளியூர் சித்தர் அடியார்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையில் குடைச்சாமி சித்தரின் முதலாவது திருவுருவச் சிலை காரைதீவில் பிரதிஷ்டை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குடைச்சாமி சித்தர் இலங்கையின் பல பாகங்க ளுக்கும் சென்று மக்களுடன் வாழ்ந்து அருள் ஆசி வழங்கியவுடன் மக்களின் துன்பங்களையும் தீர்த்து தனது சித்துக்களை மேற்கொண்டவர். இந்தியா உட்பட உலகின் பல நாடுகளுக்கும் சென்று பல வித்தைகளை கற்று பல விசேட நன்மைகளை மக் களுக்கு உணர்வுடன் செயல்படுத்தியவர்.

குடைச்சாமி சித்தரின் பிரதான சீடரான சுவாமி ஜீவாகரன் காரைதீவு - 08 கடற்கரை வீதியில் சிவசக்தி குரு குடைச்சாமி சித்தரின் சர்வமத பீடத்தை கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து நடாத்தி வருகிறாரர். அவரின் குரு பக்தியின் வெளிப்பாடாக இந்த திருவுருவச் சிலை இந்திய சிற்பிகளால் வடிவமைக்கப்பட்டு நேற்று முன்தினம் யாகம், அபிஷேகத்துடன் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது .சமாதி அடைந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபு லானந்த அடிகளார், சித்தருள் சித்தர் ஸ்ரீ சித்தானைக் குட்டி சுவாமி ஆகியோரின் சிலைகள் ஏலவே காரைதீவில் இருந்து வருகின்றன. அந்த வரிசையில் குடைச்சாமி சித்தரின் திருவருட்சிலை காரைதீவில் பிரதிஷ்டை செய்யப்படுவது சிறப்புக்குரியது.

பிரதிஷ்டை செய்த இருதினங்களும் பிரபல சமூக செயற்பாட்டாளர் கிரஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஏற்பாட்டில் அன்னதானம் இடம் பெற்றது.








## காத்தான்குடியில் நேற்று எழுத்தாளர் ஒன்று கூடல்

(க.கிருபாகரன்)

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக் களம் நடத்திய எழுத்தாற்றல் மேம்பாட்டு கூடல் – 2022 நேற்றுக் காலை காத்தான்குடி பிரதேச செயலக ம ாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக் கள பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தலை மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த எழுத்தளர் மேம்பாட்டுக் கூடலில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்முனை வடக்கு, மண முனைப்பற்று, மண்முனை தென் எருவில் பற்று, மண் முனை மேற்கு, மண்முனை தென் மேற்குப் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 60 எழுத்தாளர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் இக்கலைஞர்களுக்கான சான்றிதழ்களை மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் வழங்கி வைத்தார்.

அத்தோடு நிகழ்வின் முக்கிய அம்சமாக எழுத்தா ளர்களின் பெருமை கூறும் ஆவணப்படமும் வெளி யிட்டு வைக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# காரைநகர் – ஊர்காவற்றுறை இடையேயான பாதையைச் சீரமைக்க ஆளுநரிடம் கோரிக்கை!



காரைநகர் – ஊர்காவற்றுறை பாதைச் சேவையை சீராக இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்தப் பாதையூடாக போக்குவரத்துச் செய்யும் அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இந்தப் பாதைச் சேவை இடம்பெறாமையால் தாங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவித்துள்ள இவர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை இந்த விடயத்தில் அசமந்தப் போக்கைக் கடைப் பிடிக்கின்றது எனவும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் கடந்த வியாழக்கிழமை வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

காரைநகர் மற்றும் வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென் மேற்கு உள்ளிட்ட பல இடங்களில் இருந்து ஊர்காவற்றுறை, வேலணை மற்றும் தீவுப் பிரதேசத்தில் உள்ள அரச அலுவலகங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களும், இதேபோன்று மேற்படி தீவ கத்தில் இருந்து காரைநகர் மற்றும் இதர பிரதேசங்களில் உள்ள அலுவலகங்களுக்குச் செல்லும் அரச உத்தி யோகத்தர்களும் மற்றும் பொதுமக்களும் என ஆயிரக் கணக்கானோர் தினமும் இந்தப் பாதை ஊடாகவே பயணத்தை மேற்கொள்கின்றோம்.

எரிபொருள் இன்மையைக் காரணம் காட்டி கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக பாதைச் சேவை இடம்பெறவில்லை. இந்தக் காலத்தில் தனியார் படகுச் சேவை இடம்பெற்று வருகின்றது. இந்தப் படகு மூல மான பயணம் ஆபத்துக்கள் நிறைந்தது என்பதுடன் எமது மோட்டார் சைக்கிள்களின் மக்காட், கண்ணாடி, சிக்னல் போன்றன அடிக்கடி உடைந்து சேதமடைகின் றன. மேலும் வாகன அடிச்சட்டமும் பாதிக்கப்படுகின்றது. மோட்டார் சைக்கிள்களை ஏற்றி இறக்கும்போது கீழே வீழ்ந்து உதிரிப்பாகங்கள் சேதமடைகின்ற சம்பவங்களும் அவ்வப்போது நிகழ்கின்றன. அத்துடன் இருவழிக் கட்டணமாக தினமும் 200 ரூபா பணம் செலுத்தவேண்டி உள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் எமது வாகனங்களின் உதிரிப்பாகங்களை அடிக்கடி மாற்றுவது என்பதும், தினமும் 200 ரூபா பணம் செலுத்துவது என்பதும் எங்களை கடுமையாக பாதித்துள்ளது. இந்தச் சுமையை எங்களால் சுமக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாதை விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை தொடர்ந்தும் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றது என நாம் உணர்கின்றோம். பயணிகள் சேவையில் ஈடுபடும் இ.போ.ச மற்றும் தனியார் பஸ்களுக்கு விசேட அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படுவது போன்று படகுக்கும் எரிபொருள் வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். அத்தியாவசிய சேவையான பாதை ஒன்று இருக்கின்ற நிலையில் நாம் இவ்வாறு வீணான சிரமங்களை எதிர்நோக்குவது வேதனையானது.

மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய இயந்திரமே தங்களிடம் இருப்பதால் மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்ள முடியாத காலங்களில் சேவையை மேற் கொள்ள முடியாமல் உள்ளது என வீதி அபிவிருத்தி அதி கார சபை பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனால், பெற்றோலில் இயங்கக்கூடிய இயந்திரம் ஒன்றையும் வைத்திருப்பதன் மூலம் மண்ணெண்ணெய் இல்லாத நேரங்களில் பெற்றோலில் இயக்கி சேவையை மேற் கொள்ள முடியும் என நம்புகின்றோம்.

எனவே, இந்த விடயத்தில் தாங்கள் அதிகூடிய கரிசனை எடுத்து பாதைச் சேவை தடையின்றி சீராக நடைபெற ஏற்பாடு செய்வதன் மூலம் அரச உத்தி யோகத்தர்களினதும் பொதுமக்களினதும் வீண் சிரமங் களுக்கும் பொருளாதார இழப்புக்களுக்கும் தீர்வு பெற்றுத்தருமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் யாழ். அரச அதிபர், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# போபத்தலாவ தேசிய கால்நடைபண்ணையை தனியார் மயமாக்கும் திட்டத்துக்கு எதிர்ப்பு!



அரசுக்கு சொந்தமான போபத்தலாவ தேசிய கால்நடை பண்ணையை தனியார்மயமாக்கும் திட்டத்திற்கு எதிராக போராட்டம் ஒன்று நேற்று (சனிக்கிழக்கிழமை) இடம்பெற்றது.

போபத்தலாவ தேசிய கால்நடை பண்ணை வளாகத்துக்கு முன்பாக அங்கு பணிபுரியும் சுமார் 150 இற்கும் மேற்பட்ட ஊழியர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் போது, போபத்தலாவ தேசிய கால்நடை பண்ணையை விற்பதை உடனே நிறுத்து, அரசாங்கமே இந்தப் பண்ணையை தொடர்ந்து நடத்த வேண்டும், இலாபத்தை ஈட்டிக்கொடுக்கும் பண்ணையை தனியாருக்கு விற்காதே என வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்திய வண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு போராட்டம் சுமார் இரண்டு மணித்தியாலயங்கள் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் இவ்வாறான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற் கொள்ள வேண்டாம் எனவும், இந்த விடயத்தில் அரசாங்கம் தலையீட்டு, தொடர்ந்தும் அரசாங்கமே இந்தப் பண்ணையை நடத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## பாடநூல்களை அச்சிடுவதற்கு இந்திய கடனில் மூலப்பொருள்!

பாடநூல் அச்சிடுவதற்குத் தேவையான மூலப்பொருள் களை இந்தியக் கடன் உதவியின் கீழ் இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாடசாலை மாண வர்களுக்கான சீருடைகளில் 30 வீதம் உள்ளூர் உற்பத்தியா ளர்களிடம் பெற்றுக்கொள்ளப் பட்டு வழங்கப்படும் என அமைச் சர் குறிப்பிட்டுள்ளார்.

# தற்கொலைத் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வுகள் மட்டக்களப்பில் நேற்று








(க.கிருபாகரன்)

உலக தற்கொலைத் தடுப்பு தினத்தை முன்னிட்டு உளவியல் ஆலோசனை மையத்தின் விழிப்புணர்வு நடைபவனி நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

இவ்விழிப்புணர்வு நடைபவனியானது மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இருந்து ஆரம்பித்து காந்தி பூங்கா வரை சென்றது. இதனைத் தொடர்ந்து சுவாமி விபுலா னந்தா அழகியல்கற்கைகள் நிறுவகத்தின் நாடகத்துறை மாணவர்களினால் விழிப்புணர்வு வீதி நாடகமும் அரங்கேற்றப்பட்டது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு உளவியல் ஆலோசனை மையத்தின் உறுப்பினர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.09.2022இல் வெளியிடப்பெற்றது.